வோய்தொழு, விகபரபோகம்வீடுமீயுவோய்நல மி
சைகயிலாசவாசனேமகேசனே. (ந)

கயலெனமேவு காதுமீதுலாவிய கவின்விழிமா
தராசைவாரிவீழ்வுட, னயர்வதுசேர்வுறுதவாறுநீதி
யி லனுகலிலேலைழநாளும்வாழுவேயுறு, தயவருள்
வாய்களுதிபாபனுடவி தழைவுறுநாகதுஷ்ணு பரா

யரா, வுயர்வொடுசாமம்வேறிலேகனேசிவ முறு
பொருளானஞானமோதுதேவனே. (௪)

மளமிகுலோபமான மாகிமாய்வுறும் வகைபுரி
நேசமோடு கூடியேபுதிர், கனியெனநாஞாநாவுபாட
வேயருள்கனைதருபாவின்மாலைபாதமீதினி, லினிமை
யதாகநாடிநீகொள்வாயா வெழினதிதாமமேவி வாமு
நீள்சடை, மிகல்விடுசேகராகபாலயாகன மிளிர்பொ
ருவாடுஞானவேதநாதனே. (௫)

பஞ்சகம் - முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

ஷ கவிசங்கரம்.

மறைமுடிந்திடமுறைத்திடுபெருந்தலைவியை
மணவறம்புரிவுறுங்கருணையங்கடலினே
யுறைபெரும்புவனமும்பதிகளும்பலசெய
வுயர்வெழுங்கனபொனம்பலநடம்பயிலுவோய்
குறைமிகுங்களமுறும்பரமசங்கரவினை
கலவிடுங்கமலவந்தனையுடன்கரியவ
னறைநெடுங்ககனமண்டுருவியுங்கதிர்விழி
யறிதருபடிதவிர்ந்திடவளர்ந்தவரனே. (க)

விண்டலங்கடங்கிடங்க ளென்றுகொண்டுவி ண்டிலா, வண்டரும்பயங்கரங் கொளன்றுஞ்சமு ண்டவா, வெண்டுலங்குசெம்புயங் கொடென்கணி ன்றபண்டனே, தொண்டர்வந்துவந்தனைஞ்செய்து ங்கமண்டு நம்பனே.

(உ)

சந்தனகுங்குமங்கள்புழுககில் சந்ததமங்காங் கொடுடலது, கந்தமிகுந்துதங்கவணிவொடு கந்தர மங்கமண்டிகருமைய, குந்தளவங்கொணங்கைகலவி யென் குண்டுபொருந்துழுந்தி முழுகினே, ஐயந்தி டலின்பதங்கடருகுதி யுந்தியதுந்திநின்றதலையனே.

நிலைமைச்சால்பதுமேவிய ணிறையத்தானரு ண்மாதவங், குலையப்பாவியுளோயுறை கொடுமைக் கோபமதாமழு, வொலையச்சீதளமேறிய துணைமெய் ப்பாதகுகோதகங், தலைவைத்தேயருள்வாயமர் சம பத்தானுவதீதனே.

(ச)

கலையைவிரித்தேயறியுமுளத்தார் கருதுமலர்த் தாளெனதுமனத்தே, நிலைகொளவைத்தேயருளுதிச ந்தேறிகழும்வனச்சுகர குருனேக்கேய், முலையமுதிட் டவளர்வுறவைத்தாய் முதிருகனித்தேனெனவு ருசித்தே, மலைவிலகத்தாரறிவிலிருப்போய் மலம தொசித்தேயிலகிடுசித்தே.

(ரு)

காகமொருவிழிமேவிநாடவேசெய் காணாநிகர்
வுறமேனிமாயனார்கட், கோகனகமலர்தூவுபாதமே
யிக் கோளதுறுமடியேனொநாளுமேவிச், சோகமற
வருள்வாய சோகனைசெஞ் சோதிமயகுருவான
ஞானநாத, வேகநதியணிசேகராமகேச வேதமுதலெ
ணுநீதபோததேவே. (௬)

நித்தியவேதங்களை வாசியாவே நிற்புறுபார்
துங்கமூர்தேரதாவே, பைத்திடுசிரங்கணிள்பாணமா
வேபறறியுளாகங்கணேர்வாகவேமூன், றுற்றிடுசோ
மங்கடீருடுவோனே யொப்பறநாகங்கடாராகமேலே,
முற்றிடுமாதங்கநேர்மேனியானே முத்தியிலேதங்
கும் வாழ்வேகல்காயே. (௭)

பத்தர்சித்தர்களுநாளுமறவாதுகனிவார் பத்தி
சித்தமதின்மேவியுறு பூசைபுரியு, நித்தவந்துவெளு
ஞானவுருவானபரனே நிஷ்களத்துவமதேறமொறு
மோனகுணனே, மத்தமெத்தவுறிராவணனைவாதை
புரியு மட்டுமிக்கொழுகு மாமலர்கணேருமடிக, ணத்
தமுற்றவறியாமையது மாடலுறவே நத்துமெற்கரு
டியோகபத மேவுசிவனே. (௮)

இடைதளாடவெழுமாமலைக ளேய்முலைகளாற் றொடையுலாவுகுழலாலுணர்வு மாறொடர்புடன், கடையதாகும்வளமைபுரியுமாதர்கழூதென், றடைவதானவறிவேயுருறவாள்வையரனே. (௯)

நிகிலவுலகமுமுனமுன்வழிபடு நெறிகொள்கரியதன் முகனையசுரர்க,ளகலவயில்விடு முருகையருளிந லறமதிலகுற வருளுமமலையுந்,திகழுமயிலெனு முருவொடளவறு செழுமைநறுமலர் கொடுகனிவதுடன்,சுகுணவடியவ ரெனுமலனியவை தொடருமடிமலர்தொழுதபெரியனே. (௧௦)

காமவிகாரக்கொடுமைப்பேயைக் கண்டேதண்டித்தெக், காலுநிராசைப்புலியிற்சேரக் கண்டாடந்துய்ப்பாய், காமனுஞறைவைப்பெறுபைச்சோகப் பொங்கேதயென்றுற்று, நாடவுருபத்தனுவைப்போதக் குன்றேயென்றற்கீ, பாமனுநாவுக்கரசைக்கூவிப் பண்டேவிண்டுற்ற, பார்வையுநாடற் கருமைச்சீர்மைப் பைந்தாடந்திட்டோய், சாமவுருபத்தனுவற்றியக்கண்டேநின்றுற்றோய்,சாகைகுலாமெய்ச்சுருதிப்போதப்பண்டேசெஞ்சத்தே. (௧௧)

கவிசங்கரம்-முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஷ பலசந்தமாலை.

கனகசபை யினினிகரி னடனமனை வரதமுறு கருணையொடு புரியுநல வழகா,வனகதவ முனிவரக மதனிலொரு சுகசனித வருணவம தருளுமிகு குழகா,பனகசய னயனனி யளவில்பக ழுருவியறி படலிலடி முடியிலகு பொருளே, மனமதனி லளவின்மகிழ் வணையடிய ரொடுமுறவு மருவும்வண மருள்செய்திரு வருளே. (௧)

எனதுமலமதிரியும்வகைசெயினியசரணமருள்வையோ,மனமென்வனனிலுறையுமகமென்வரியுமுடியவருவையோ, தனமதுடையமகளிர்மயல்கடவிரவருள்செய்திடுவையோ, புனலுமதியுமுடையசடைகொள்புனிதமருவுபகவனே. (௨)

ககனம்வளியனல்புவனிலமதிகனலிபுலனிவைவடிவோனே, சகலவுலகமுமயல்செய்வலியுறுதனுமதனையெரிவிழியோனே, பகலொடிரவறுவெளியிலுலவிடுபரமகுருவெனுமருளோனே, துகளறுவடகயிலைமலையுறைசுகுணநிருமலபகவானே. (௩)

கலைமதிமதிலணைவுறுபொதுவதிலுமை கண்கர
ணை, வலைநதியலைதரநடமிடுபசுவினைதைந்தாட, தலை
மையதுறுமிருகழலடிநிகழ்கரிதந்தோனே, நிலைபயி
றவமதுதிகழ்வுறுமனமிடநின்றேனே. (௪)

பொறிகடுன்றியவுருவு புலனிலொன்றியகரண
ஞ், செறிவதின்றியசுகுணசிவசின்மன்றுளபரம, வ
றிவதொன்றியவிமலரவருணின்றிடுமடிகள், மறிவதி
ன்றியவுணர்வுபெறலதென்றுரைபுகலே. (௫)

தண்டங்கழுகொண்டங்குறு சண்டன்பெறுபி
ண்டம், பிண்டங்கிடவெண்டங்கடிகொண்டன்றுதை
ண்டு, விண்டங்குவர்மண்டங்குவர்கண்டன்றவம்வி
ண்டே, தொண்டிங்குறமன்றந்திகழ்துன்றுந்தயைவி
ண்டே.
(௬)

மேவிக்கொள்சீர்தொக்கதாளைக்கொ டேட்டைமுக்
வதக்குழாஞ், சேவிக்கவேநிற்குமாநக்கனேசக்கு
சார்நற்குளா, நாவிற்கணுமக்குழாம்வைக்கநீர்வைக்
ஞானக்கணு, வாவிக்கணீநிற்கநேசிக்கவாழ்விக்குமா
சாக்கனே.
(௭)

பூபாரப்பதிவாழ்வேசெப்பஞர்போதார்கற்பகவூ
சோபாரத்தனமார்வேலையக்கடிதோளாளைக்கழு

தென், றேபார்வைப்படநீபார்வைத்தயையேயேழை க்கருள்வாய், காபாலக்கரனேகாலற்கொருகாலாமுக் கணனே. (அ)

வடிவெடுத்தெழுதரியமயனேமலைவளைத்திடுவ லியபுயனே, தடிபிடித்திடுநெடியகாரனே சுடர்மணி ப்பனகமணியுரனே, பொடிதரித்திலகுருவவரனே புகழ்மறைப்பொருளுரைசெய்பரனே, கொடிதெனச் சொலுமலவயிரியேகுலவெனக்குளுறுமொருகரியே.

கமலமுறைவிக்கனுற்றதாளங்கொடு கமலகரம் வைத்துமொத்தமாயன்கர, மமலைசெயமத்தளத்திரு ளும்படி யணையுமுயிர்சித்திமுத்திசேரும்படி, மூமல மறுவித்தசுத்தபாதந்தனை முயலன்முதுகத்தில்வை த்துமோதந்தரு, விமலககனத்தினித்தமாடுங்கணவி புதர்புகழ்நித்தமுத்தவானந்தனே. (௧௦)

பலசந்தமாலை முற்றுப்பெற்றது.

உ

திருச்சிற்றம்பலம்.

நவரத்தினமாலை.

பாவினம்.

வாசபங்கயமலர்வளர்திருமறு மார்பனம்புயவ லோவனடிமலர், தேசமர்ந்திடுமுடிபலபுகல்களுந் தே

டியும்பெறலரிதெனுமுணர்வொடு, நேசமண்டிடுதுதி பலபுரிவுற நீயகிழ்ந்தருள்புரிதருநிருமல, கோசமைந்தையுநழுவியுனடியுறக் கோலநின்றிடுமருள்புரிபரமனே.

(க)

கலையேறியவறிவாளர்செய் கவிமாலைகொள்சரணங்,கலையேறியமதியோடுரகமதேறியசிகரங்,கலையேறியகரமேவியகருணாகரநிதியே, கலையேறியவிடையார்மயல்கலவாவணமருளே.

(உ)

கொடிதானவினையையடியார்களுய்யக்குலமோடுமொய்க்கும்பரமே, மடியாதமுத்தியருளோடுதந்தவலிமேவுஞானகுருவே, துடிமேவுசெங்கையுறுசம்புவேயென்றுணையேயிலங்குசிவமே, படிமேவுமாசையானைக்கும்வித்தாம்படிறேற்குமுத்தியருளே. (ந)

ஞானமணிமன்றுணட மாடியநடேசா, பானல்விழியாளையொருபாகமுறநேசா, ஊனவிழியாலமருமுன்னைமிகநோக்கி, யீனன்மகிழ்வுற்றிடவிருங்கருணைசெய்யே.

(ச)

அருளினலகிலம்படைத்தளித்தழித்தத் தொழிற்கப்பாலாய்ப், பொருவில்சிற்சொருபானந்தமாகிய பூரணப்பூந்தேவே, யிருளில்வந்துறுமறிவின்மையா

ற்பரிவிங்ஙனடைந்தெய்த்தே, னொருவராயினுந்
க்கதோர்துணையிலையுய்ந்திடவருள்வாயே. (௫)

எந்தக்குலமாயெவராயிடினுமிசையும்பூசைகொ
ண்டுள்ளன்பாய், முந்தும்பூசைமுடித்தாராயின்மூ
வாப்பதமேதவறுதருள்வோய், தொந்தொம்மென
வேநடனம்புரிவோய்தோன்றுத்துணையாமருளைத்த
றவே, சந்தப்பருவங்கொடியேற்கிலையோசான்றோர்
தருமாறன்றென்பாரோ. (௬)

மாயையானசுடு கோடைமாய்க்கவுறு வலமை
மேவுசிவமேகமே, காயமாதிகளையாளெனும்படிசெய்
கார்கொளாணவநாசனே, வேயையென்றுவளர்தோ
ள்களாருமைநல்விழிகளித்திடநடிப்பவா, பேயனே
ன்பிழைகள்யாவுநீக்கியுறுபெரியபேரருள்புரிந்திடே.

கண்மைசேர்குருந்தடி முளைந்திடுமுக்கட்கரு
ம்பே, தெண்மையன்பரம்வண்டுணக்காசிவாழ்தே
னே, யுண்மையாகிநீயிருக்கவுமறிகிலாதந்தோ, வெ
ண்மையாகியிங்குழலுவனுனக்கழகோ. (௮)

இறையாமைந்தக்கரவோனே யெழிலாமைந்தக்
கரவோனே, குறையாமுருகைப்பெற்றோனே குண
மாமுருகைப்பெற்றோனே, மறையமலைக்குமரியானே

வடிவமலைக்குமரியானே,பொறைவில்லாகத்தரித்தோனே பொதுவில்லாகத்தரித்தோனே. (க)

சுவரத்தினமாலை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

திரிபந்தாதி.

கட்டளைக்கலித்துறை.

திருமால்விடையயன்காணாப் பதங்கமென்றிட்டியுறக், கருமால்விடையுறுஞ்சற்குருவாகிக்கரைசெய்சங்கைக்,கொருமால்விடைதருமுத்தமஞானவுமாபதியே, பெருமால்விடையிவர்பேராயிரத்துப் பெருமையனே. (க)

பெருமையிலங்குரித்துத்தியவாலிற் பெருந்தவத்தோர், கருமையிலங்குறுகாதேமறைப் பொருள் கட்டுரைத்தோ, யருமையிலங்குமரனுதிமேல்வைத்தவற்பகற்றி, யொருமையிலங்குமுத்திதந்தாளவுகந்தருளே. (உ)

அருளாரமுதமமுதுசெய்தோங்க நஞ்சாற்றெனவே, வெருளாரமுதர்நினைவேண்டநீயுன் விளங்குகண்டங், கருளாரமுதம்பெறவவரவ்விடங்கைதொட்டவா, பொருளாரமுதர்புகழ்மால்புகழ்ந்திடும்பூம்பதனே. (ங)

பூம்பதநாகங்கடுக்கையங்கூவிளம் பொற்சரண
த், தோம்பதநாகழறக்கரந்தூவவுள்ளுநன்னவுடல், சா
ம்பதநாகமனமென்றுணரத் தருதியருள், போம்பத
நாகமணிந்தேயிலங்கும்புராதனனே. (௪)

தனமுடையோடென நோக்கப்பரந்த தனையுள
காஞ்,சனமுடையோடென கைகொங்கையார்நங்கை
சார்கழுதென், றுனமுடையோடெனதங்கமதாம்பங்
தமோவவருள், கனமுடையோடெனக்கொம்போய
டியனைக்காப்பவனே. (௫)

காப்பவனீவிருகற்பதிவாழலகாதிகணற், பூப்
பவனீவிருஞற்றுமினென்றரிபூமற்கருண், மாப்பவ
னீவிருந்திகொன்றைமாலையன்வானவர்க்கு, மூப்ப
வனீவிரும்பித்துதிகேட்டருண் முத்தியதே. (௬)

தேவாரமுந்திருவாசகமுஞ்சொலுந் தெள்ளியர்
க்கு, மாவாரமுந்திவரந்தருஞானமணிவிளக்கே,கோ
வாரமுந்தியகொங்கைபங்காளகுணாகரவென், னுவா
ரமுந்திவந்தேயுனைப்பாடு நலம்புரியே. (௭)

நலம்பிரியாதவயிலிகல்வாள்விழி நங்கையர்தங்
குலம்பிரியாதகனதனங்காணுங் கருத்தையொழி, சில

ம்பிரியாதமறைச்சிலம்பாபெருந் தென்புலியூர்த தல
ம்பிரியாதவனே நடராஜமெய்ச் சங்கரனே. (அ)

காந்தைவருணைமலர்கொண்டுபோற்றிக் கனிந்த
வன்பர்க், கரந்தைவருணங்கெடகாட்டஞ்செய் சிவ
வார்பொறியாம், பரந்தைவருணடுங் கக்கலக்காவ
கைபார்த்தருளாய்ப், புரந்தைவருணஞ்செவியுட்புக
வின்றுபோதிப்பையே. (கூ)

போதித்தருவனருகனைத்தேவெனும் புன்சமய
ம், வாதித்தருவாரைமுனைத்தேவெனு மன்சமய,மா
தித்தருவர்க் கடலெழூந்தாங்கென வாக்கினர்க்குச்,
சாதித்தருண்முனைநின்றிட்டவாதவர் தந்திருவே. ()

திரிபந்தாதி முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

மும்மணி.

நேரிசைவெண்பா.

சார்கொண்டமேனிக் கடவுளயன்முதலோர்
சார்கொண்டுபோற்றுநடராஜா—சீர்கொண்ட
சீர்மேவுநான்கறிவோர் நேசித்தசற்குரவு
நேர்மேவுமென்குருவு நீ. (க)

உருத்திருண்டமேகத்தை யொவ்வாவெனமஞ்ஞர்
கருத்திருண்டதென்னக்கருமை—பருத்திருண்ட
தேனார்பூங்கோதைச் சிவகாமியானொன்று
மானநடேச னாரா. (உ)

காரணமாநின்ற கருத்தாநடேசனினைப் [ய்
பூரணமாவாழ்த்துவதேபுண்ணியநாத்— தாரணிமெ
சேரத்தொழுவதுவே சென்னியாங்கண்ணருவி
நேரச்சிந்திப்பதே நெஞ்சு. (ஙு)

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

தெட்சணாமூர்த்திவெண்பா.

கருணைத்திருவடிவாய்க் கல்லாலின்கீழே
யிருணைத்திருநால்வர்க்கேலப்—பொருண்ஞானம்
போதித்துவைத்த புனிதகுருவேஞான
வாதித்தனேயென்னை யாள். (க)

ஆள்வாரிலியூர்மா டாகித்திரிவேனைத்
தாள்சூட்டியாளத்தகாதுகொல்—வேளெரித்த
கண்ணுதலோய்மெய்ஞ்ஞானக் கல்லாலடியின்கீழ்
நண்ணுபவனே நவில். (உ)

நவிலும்பரசிவர் நண்ணரியமுத்திப்
புவியிலொன்றுமென்றுபோதத்—துவிதமறச்
சின்முத்திரையாற் றெருட்டும்பரகுருவே
நின்முத்தியென்றடைவே னான். (௩)

நானென்னும்போத நடுவேமுளைத்துநின்று
கோனென்றுநின்றன்குரைகழலாந்—தேனென்றுட்
புல்லாமற்செய்யுமதைப்போக்கியருள்வைத்துக்
கல்லாலமூற்றுமெனைக் கா. (௪)

காதல்வெகுளிக் கரிசறுத்தென்னுள்ளமெனும்
போதணையாக்கொண்டுபுனிதச்செம்—பாதங்கள்
வைத்திருப்பதென்றோ மணியேயான்யோகங்கள்
கைத்திருப்பதென்றோ கழறு. (௫)

கழற்கணென துள்ளங் காத்திருக்கச்செந்நாப்
பழச்சுவைபோலுந் துதிகள்பாட—வழுத்துமணி
ாயம்புரியக் கருணைபுரிவாயின்று
ாயும்புலித்தோற் பரா. (௬)

பரசிவபந்தப் பரிசுணர்த்தியாளச்
ரதசுயம்பிரகாசப்பே—ருருவெடுத்து
ந்தகுருவே வளர்மணியேமெய்ஞ்ஞான
ந்தரனேபாமாலை சூடு. (௭)

சூட்டுசிரமீதிற் சோதிமலர்ப்பதங்கள்
வாட்டுமலங்களெல்லாமாறவே—பாட்டுக்
கருளேபுரிகுருவே யம்பரமேவேதப்
பொருளேயடியேற்கிப் போது. (௮)

போதன்றிருமால் புலவர்வணங்கப்பொற்
பாதஞ்சிவந்தபரமனே—வேதஞ்சொல்
வித்தகனேயுன்னை விடாதவடியேனைச்
சித்தமுறுமெய்யருளாச் செய். (௯)

செய்யசடையுந் திருவதனமண்டலமுங்
கையமர்சின்முத்திரையுங்காழ்மலமும்—பொய்யு
மழித்தவடியு மாவந்துமுன்னே
கழித்திடுவாயென்றன் கரு. (௰)

மூலகுருவாகிய
தெட்சணாமூர்த்திவெண்பா
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

௬ திருவருள்வியப்பு.

திருப்பாற்கடலேச் சிறுகுழந்தைக்கூவ
விருப்பாலளித்திட்டவெல்விற்—பொருப்பு

ளருளேயருளன்றி யல்லாருளு
மருளோவுளமே யறை. (௧)

கல்லெறிந்த சாக்கியர்க்குங் காட்சிகொடுத்தசிவ
னல்லருள் போலும்பரினுநாடிறு — வில்லை
பிரியாதிருந்தாற் பிழைக்கலாநெஞ்சே
கரியாகநீயிதனைக் காண். (௨)

சித்திக்கும்புத்திக்குஞ் சுத்திக்குந்தேவபத
முத்திக்குமத்துவிதமுத்திக்கும் — பத்திக்கு
மூலந்திருநடன முன்னோனருளேயென்
றோலமிடும்வேதநெஞ்சே யுன். (௩)

உரையாதிசேஷ்டை யொழித்துமனமே
திரையாவுநீக்கித்தெளித்துப் — பரையரனிற்
கூட்டுந்திருவருள்போற் கூறுநலஞ்சமயக்
காட்டிடத்துமுண்டோ கரை. (௪)

அப்புமுப்பும்போற்பிரியா வாறுதனைக்காட்டி [தாய்
மெய்ப்புறத்துநின்றளிக்குமீசனருட் — கொப்புடைத்
வேறுபொருளுண்டென்று வேதாகமாதிகளுங்
கூறுமோநெஞ்சே குவி. (௫)

வேண்டுவனவெல்லா மிக்கவளித்தளிக்குந்
தூண்டுதலில்லாச்சுடரின்றாவருளை—யாண்டுந்
திரிவிலாதேயுருகிச் சிந்தித்தானெஞ்சே
பிரிவிலதாமுத்திவரும் பின். (௬)

கண்டவர்தமுள்ளங் கவரும்பெருநடனங்
கொண்டசிவபெருமான்கோலவரு—ளெண்டிசைக்கு
மாதாரவாம்வேறில்லை யாழ்ந்தமனமேநம்பு
போதரசம்பின்புவரும் பூத்து. (௭)

மூலமலத்தின் முழுகிக்கிடந்தநமை
மேலடையத்தூக்குவிட்டான்வீறருளைப்—போலவே
யுற்றதுணையுண்டோ வுள்ளமேநீமறந்த
பெற்றியென்னைவென்முன்னே பேசு. (௮)

பெத்தமுத்திதம்மிற் பிரியாமனின்றளிக்கு
மத்தனருளையன்றியாருண்டிங்—குற்றதுணை
யென்றுமுக்காற்புகன்று மேழைநெஞ்சேநாடாம
லின்றிருந்தாலியான்செய்வ தென். (௯)

தஞ்சத்திருவருளைத் தான்விட்டுமுன்னோடி
விஞ்சுவினையாலேவெப்புண்ட—நெஞ்சே
யரனருளைமுன்னிட்டே யைம்புலனையுங்கண்
டுரமுடனேநீயுண்பா யுற்று. (௧௦)

திருவருள்வியப்புமுற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பஞ்சகம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

ஆணவமலமாமிரவினிற்கிடந்த வடியனேன்ற ன்னையன்றருளாற், பேணியேயெடுத்துத்தனுவில்வி ட்டதும்பின்னருமுயிர்த்துணையாகி, யேணமாயுள் ளின்மறைந்திருந்திசைந்த வின்பமென்பனநாளொ ங், காணவேயூட்டிநின்றதும்பரநின் கடைக்கணிற் றோன்றியவருளே.

(க)

அருளினாற்றனுவுங்கரணமும்புவன மானதும ைந்தபோகங்கள், சருவமுங்கிடைத்தவென்றறியா மற்றுழக்கிடுமவித்தையாற்கட்டுண், டிருமையுநாமே முயற்சியாற்பெற்றோ மென்றனுதினமுமுண்மைய தாக், கருதியேகிடந்தவென்பிழைபொறுத்துக் கடை க்கணித்தருளுவாய்சிவனே.

(உ)

சிவமெனும்பொருளேயுயிர்வருக்கங்கள் செக முறுபலபலபொருளா, மெனவையுநீயென்றுன்னருள தனாலே யிசைவுறக்காட்டினையின்று, பவமொழிந்த கலவவ்வழிநிறுத்திப் படிறனேன்றன்னையெந்நாளுந், தவமுறக்காக்குங்கடனுனதலவோ தமியனேனுரை ப்பதென்னேயோ.

(௩)

உரைசெயன்முதலாவுள்ளனவெல்லாமுன்னரு
ட்செயலலால்வேறே, கரையவுமுண்டோநினைக்கவு
முண்டோ கருணையங்கடற்றிருவடிவே, பரையருளி
ன்பவுருவனோநடனம் பண்ணிடுந்தகரவாகாச,வரை
யனேகாளத்திப்பரம்பொருளே யானைக்கவாழ்க்கி
டும்பரனே. (௪)

பரமனேயிராமலிங்கமேமருதூர்ப் பண்ணவா
காழிவாழ்தேவே, திரமறைக்கெட்டாமோனமேயடி
யர்செய்திடுந்தீமையைப்பாரா,வரனெனுங்கருணாநிதி
முழுமுதலேயப்பனேவேதகிரீசா, குரவனாய்வந்தெ
ன்குறைதவிர்த்திட்ட கோலனேயென்னையாண்டரு
ளே. (௫)

திருவருட்பஞ்சகம் முற்றிற்று.

௨

திருச்சிற்றம்பலம்.

௯ திருவளர்பதிகம்.

திருவளர்கமலத்துறைவிதிநெடுமாறேடியுமறி
யகிலாத, வுருவளர்சோதி யரும்பெரும்பொருளே
யொப்பிலாக்கருணையங்கடலே, மருவளர்மலரார்வா
ன்புரைகுழலாண்மகிழவராப்புலிதுதிக்கக், குருவள
ர்மணிமன்றினிடம்பயிலுங் கூத்தனேயென்னை
யாண்டருளே. (௧)

சிவசந்நிதானமுறை.

அ

அருள்செயுமுருக்கொண் டாலின்கீழ்நால்வர்க்
கருமறைப்பொருடனை மகிழ்ந்து, மருளறவுரைக்கு
ஞ்சிவபெருமானை வஞ்சனைகத்தசேதனவல், வி
ருளறஞானச்சுடருறத்தகாளைத்தையேபவப்பிணி
மருந்தே, தெருளருந்தெளிவே குணப்பெருங்குன்
றேசெல்வமேயழிவிலாத்தேவே.
(௨)

தேவர்கண்முனிவர் புகழ்ந்திடுவளங்கொ டில்லை
யுள்ளாய்பொறியையந்திற், றூவல்செய்துலகப்பற்று
டையிதயந் தனையொரீஇனாருநன்னறவார், பூவலா
ருச்சித்தடிபணிந்தரியபுனிதகைவல்யமுற்றுயுமா, று
வலேற்றினியவருள்புரிபரசிம் கன்றிமற்றுண்டுகொ
ண்ணவிலே.
(௩)

நவிற்றிடற்கரியவண்டகோடிகளுள் ளவிதசிவர்க
ண்மிருதி, பவித்திரமறைகண்முதலியவனைத்தும் ப
டைத்தனீபரிவிலேனெஞ்சம், குவித்தருந்தவந்தான்
புரிந்துமெய்ந்நிலையைக் கூடவருள்வகுத்திலைகொ
ல், துவித்தெறவொன்றுய்விளங்குசெஞ்சுடரே து
ணையெனக்காருரைசெய்யே.
(௪)

செய்யவார்ச்சடையிற்பிறைமுடித்தவனே தே
வனேசுடர்மழுவுறுசெங், கையனேகறைகொண்மிட
ற்றனே சிவனேகௌரிபங்குறைதிருநீற்றின், மெய்ய

னைமணிமன்றினினடம்புரியும் விமலனேவினவுவை
கேண்மோ, தொய்யலைம்புலப்பற்றிரியநின் சரண்க
டொழவருடருவதுன்பரமே. (ரு)

பரமனேகுழந்தைவெம்பசிக்கிரங்கிப் பனிப்ப
யவாரிதியளித்த, திரவருட்கடலேகுணப்பெருங் கு
ன்றேதீவினைக்கோரருமருந்தே, யுரமூறுமூவாயிரம
றையவரினோர்மறையவனெனவந்த, வரதனேயென்
மூறுமையொடாரேறி மகிழ்ந்துவந்தாள்வதெந் நா
ளோ. (சு)

நாணுநாண்மலர்கொண்டுனதடியிணையினல்லரு
ச்சனைபுரிகிலேன், வாணுடைமணிப்பொன்மாடநீடி
ல்லைமன்றிலுன்னடனங்காண்கிலேன், னிணுநாவி
னுந்தமிழ்பாடி நேடிநயக்குகிலேனம், கோணு
டையகத்தோடிவணுறந்துழன்ற கொடியனுய்வ
கையதென்டெண்ணே. (எ)

எண்ணியவணிதைமாடமாலயமா யிவையந்தவர்
கடவுளென்றேவல், பண்ணிவன்காமவிகாரியாய்த்தி
ரிந்துபனிதருமபிறவிவாரிதியி, னண்ணினேனறன்
னையஞ்சலென்றேற்ற நாளினும்வாவிலைகொல்லோ,
வுண்ணினைகிலேயோ வசட்டையோகல்லோ வுள்ள
மோதருமறைமுடிவே. (அ)

மறைமுடிவிலங்குஞானவிண்ணொளியோ வஞ்
சனையியையந்தவெம்பொறியாங், துறையதிற்சென்று
விடயவானந்தந் துன்பமென்றெணுநினைதென்றே,
குறைவறப்புசித்துப்பின்றுயரடைந்த கொள்கையை
ச்சிந்தையினொருகா, லிறைத்துணைநினைக்கப்படைக்
குதயங்கோ வென்செய்வேனிதறியாயோ. (க)

ஈதறியாமலிருப்பையேயானு லியான்பவவெடு
பகேவேலை, யாதலாலெளியன் குறித்திழைபாவமா
கியதொழிலொருசாலும், விதலாகாதேயாகலின்வி
னையன் வெம்பிழையெலாம்பொறுத்திரங்கி, மேதகு
வங்கள்வழுவறப்புரிந்து வீடுறநினைதிருவருளே. ()

திருவளர்பதிகம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சச்சிதானந்தவாழ்வு.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மனையுறுதீபம்விட்டு மற்றழறேடுவார்போல், வி
னையினேனகத்துணிதான் வேறிலாதிருந்துங்காணு,
னையிடம்பலவுந்தேடி யுற்றிளைத்தேற்குஞானங், கூ
யின்றேயருளல்வேண்டுஞ்சச்சிதானந்தவாழ்வே

நெய்யினையின்றியாக நிறைவேற்றநினைப்பான்
போலப், பொய்வினையுன்னன்பின்றிப் பொருவிலா
முத்திதன்னை, யெய்தப்பன்னூல்களாய்த்த லேநெறி
யென்றலைந்தேன், சைவசித்தாந்தமோங்குஞ் சச்சி
தானந்தவாழ்வே. (௨)

கண்ணொளியிருளையுண்டு கதிரொழுந்தனைவிப்
பாச, மண்ணொழுவாய்நாதாந்த மருவியகருவியோடு
ண், ணண்ணினைவிழுங்கிநீயே நருகல்செய்திடுதல்
வேண்டுந், தண்ணெனுமருளாய்நின்ற சச்சிதானந்த
வாழ்வே. (௩)

சருவநீயென்றுரைக்கத் தனிமறையான்வேறு
கி, வருவினையுண்டோவிங்கு வந்தவாறெனக்குணாத்
து, மருவியகருணைநந்த வாரியையின்றுனக்குத், தி
ருவம்வாவென்றழைப்பாய் சச்சிதானந்தவாழ்வே.

பொன்மயந்தவிரவேறுப் பூஷணமுண்டோவா
ங்குச், சின்மயந்தவிரவேறு செகமுண்டோவென்று
கூறு, நன்மயவாக்கியத்தை நம்பியுன்னருளைப்பெற்
றுத், தன்மயமாகச்செய்தி சச்சிதானந்தவாழ்வே.

பிறங்கியமூன்றெழுத்தும் பிரணவத்தன்றிவே
றோ, புறம்பெனநின்றமூன்று பொருளுமச்சிவத்தி
... றமன்செயுன்னருள்வாக்கல்லா னநிற்

னுபவிக்கச்செய்து, மறம்பவமகற்றியாள்வாய் சச்சிதானந்தவாழ்வே. (௬)

கைவிளக்காலேயொன்றைக் காணலினருளைக்கொண்டே, யுய்வகையுணையுணர்ந்தே யுச்சியினுவலமென்னைப், பொய்வலைநீக்கிமெய்யிற்பொருந்துறக்கருணைசெய்வாய், சைவமாமறையில்வாழுஞ் சச்சிதானந்தவாழ்வே. (எ)

கொள்ளித்தேள்கொட்டப்பட்ட குரங்கெனக்குதிக்குமென்ற, வுள்ளத்தைக்கருப்பூரந்தொட்டுண்ணுறுதீபம்போல, விள்ளவுண்டப்புமுப்புமிரவவினையைக்கலப்பாய், தள்ளில்போருளைப்பூண்ட சச்சிதானந்தவாழ்வே. (அ)

ஆகவன்சன்னிதானத் தடுத்துறுதீபம்போற்ற ற், போதமதடங்கிநிற்கப்பொருவருக்கையைபுரிந்து, பேதமோடபேதம்பேதா பேதமுஞ்சமூன்றுநின்ற,சா கமுத்தியையளிப்பாய் சச்சிதானந்தவாழ்வே. (௯)

துளங்குறுகறங்கதென்னச் சுழல்வுறுமனமாய் ந்தேதமை, விளங்குமுன்னேடிணங்கி விமலமாநிற்க வேண்டி, யிளங்கன்றதற்குச்சேதா விரங்கல்போலின்றுநீயே, தளர்ந்திடுமெற்கிரங்காய் சச்சிதானந்த வாழ்வே. (௧0)

சச்சிதானந்தவாழ்வு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஞானநிஷ்டாபேட்சை.

கலிநிலைத்துறை.

கருவியாவையுநின்னருள்கொண்டியான்கழற்றிப்
பொருவில்சச்சிதானந்தமாம்பரைமயம்பொருந்தி
யிருமையாகியபோதமுமகன்றிடவெனக்கு
மருவுநல்லருள்புரிகுதிமன்றுள்வாழ்மணியே. (௧)

அறிவினோடறியாமையுநீக்கிமெய்யறிவாய்ப்
பிறிவிலாவருடரிசித்துப்பெட்புடன்பெரிய
குறியிலாச்சிவபரம்பொருளாமுனிற்கூடி
மறிதராதுறவருள்புரிமன்றுள்வாழ்மணியே. (௨)

சகலகேவலநீத்துணர்வாய்நின்றுசார்ந்த
விகலமில்பரைதன்னுளென்னறிவினைவிட்டுச்
சுகசொரூபமாமுன்னுடன்பிறிவறத்துலங்க
வகரமாமருள்புரிகுதிமன்றுள்வாழ்மணியே. (௩)

இச்சகப்பொய்மையமாயையாமென்றுளேயெண்ணி
நச்சிடாமனின்றருடனையேயகம்பி
நிச்சலும்பிருந்துனிலேகலந்துறநீகண்
வைச்சுகாயடியேனையாண்மன்றுள்வாழ்மணியே. (௪)

சிவசந்நிதானமுறை.

காணவந்தனைஞ்செய்யவிவேகமில்கடையேற்
காணவந்தழைமாயையாமல்பகலகற்றி
யேணமைந்தமெய்ஞ்ஞானமாமொளியினிலிசைந்து
மாணடைந்துறவருள்புரிமன்றுள்வாழ்மணியே. (ரு)

நினைவுடன்மறப்பாகியபோரலைநிகழாக்
கனையினல்லறிவாகியமாக்கடல்கலந்தே
யினைவுநீங்கியங்கழுந்துறவருள்புரியின்று [யே
வனையுஞானவிண்ணென்றுமைமன்றுள்வாழ் மணி

சாக்கிராதியவவத்தைகளியாவையுந்தணந்து
போக்கில்சிவனைப்பரனையஞ்சிவத்தினைப்புரிந்து
நோக்கிமேற்சென்றுதுரியத்துணின்றிடநுணுக்கம்
வாக்கிறைலுணைசெய்குவாய்மன்றுள்வாழ்மணியே. ( )

கரணவாதனைமாற்றியத்திரையில்பாற்கடல்போற்
புரணமாமுணர்வாய்நின்றுமேலவாய்ப்புகுந்துங்
கரணவானந்தநிஷ்டையைமேவியங்கடைந்த
மரணநீங்கிநின்றிடவருண்மன்றுள்வாழ்மணியே ( )

இரவுநற்பகல்சேர்ந்தருவிடத்தினிலிருத்திப்
பரவுமானந்தவடிவினைத்தந்தெனைப்பரிவாய
புரவுசெய்திருவடியிறைற்றாக்கியேபோக்கு
வரவுமின்னிலைவைத்தருண்மன்றுள்வாழ்மணியே. ( )

எனதியானெனுமகமமதைகடமையீர்த்தே
யினைவினல்லறிவாயென்றுநின்றுமொன்றிரண்டென்
றுணர்விலாநிலையென்னைவைத்திடுங்கடனுனதே [யே
மணமுமெட்டொணுப்பேரொளிமன்றுள் வாழ்மணி

பிரித்திடப்படும்பிழைபலபுரியினும்பிள்ளை
யுரித்ததாமனைபொறுத்தலினியருளூட்டி
யரிட்டமில்பதத்துரியத்திற்செலுத்தியதப்பால்
வரிட்டமன்னிலைவைத்தருண்மன்றுள்வாழ் மணியே.

ஞானநிஷ்டாபேட்சை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

காப்பியக்கலித்துறை.

காமார்நமக்குத்தியானொடுஞானமின்றித்
தீமாதர்களின்பங்கருதியதீயனுய்த
லாமாறுபுரிந்திலையேலினியாவதெங்ஙன்
மாமாயன்வணங்கும்விளங்கியமன்றுளானே. (௧)

பையாரரவப்பணிபூண்டிருபண்பனேயோ
கையார்மழுவேவாய்ச்சிவபூதகணேசனேயோ
வெய்யாய்தணியாய்திருநீற்றின்வெண்மெய்யனேயோ
செய்யாய்கருணைப்பெருக்குய்யவித்தினனேனே. (௨)

வில்வம்மறுகும்புனைவோயுன்விறற்கழற்கே
புல்வம்மினியேயிங்குவாவெனப்போந்தழைத்தேன்
செல்வம்விடயங்களிலென்றெனையீர்த்தசித்தங்
கொல்வம்மெனநீவந்தெதிர்நின்றுகூறலென்றே. ()
என்றாழ்முனைமீனமொடுங்கியதென்னயானு
நின்றாவருடன்னுளடங்குறுநிஷ்டைசெய்து
குன்றாசலினார்பிறப்பற்றுச்சுகம்பொருந்த
நன்றாகமுஞானமுமேயருணம்பநீயே. (௪)
ஆனாதெனதாருயிருண்ணீயணைந்துநின்று
மீனாயமலச்செயலாலுனையின்றுகாணேன்
ஞானவொளிரும்மருளாங்கதிர்தாம்பரப்பு
கோனாஞ்சிவசங்கரனேசற்றுணைப்பொற்குன்றே. ()

காப்பியக்கலித்துறை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கீர்த்தனபஞ்சகம்.

எழுசீரடி விருத்தம்.

மங்களாகரசங்கராவரமாதரார்கரபூதரா
ங்களாரஜடாதராசுயதெய்வமோனபராபரா
சங்கராகருணாகராசிவகாமசுந்தரியாதரா
புங்கஞானநடேஸ்வராசிவபுங்கஞானநடேஸ்வரா(௧)

ஆலகாலசுபட்சணசகமாதியாவுமிரட்சண
மூலசர்வதுரந்தராபிரமோதமோனபரம்பரா
பாலசுப்ரமண்யாதராவிடுபந்தஞானபயோதரா
காலருத்ரநடேஸ்வராசிவகாலருத்ரநடேஸ்வரா. (௨)

மூலமானசுதந்தராதிரிமூர்த்திரூபநிரந்தரா
ஞாலகாரியகாரணசுகஞானசற்குருபூரண
சீலவேதநல்வாகனபரசின்மயம்பெறுமாகன
பாலநேத்ரநடேஸ்வராசிவபாலநேத்ரநடேஸ்வரா. ( )

ஏதநாசநிராமயாவளரேகநாதவகண்டிதா
போதசத்வசுகாலயாபரிபூதபூத்தகிர்பாலயா
பாதநூபுரவாரணமிகுபாவமூலநிவாரண
வேதசாரநடேஸ்வராசிவவேதசாரநடேஸ்வரா. (௪)

பேதவாதமதாதீதாபரபீடலிங்கமனோகரா
சீதமாநதிசேகராவறிசித்தவாசமகேஸ்வரா
மூதராவரகங்கணநவமுக்தமாசுணபூஷண
பூதநாதநடேஸ்வராசிவபூதநாதநடேஸ்வரா. (௫)

சங்கீர்த்தனபஞ்சகம் முற்றிற்று.

௨

திருச்சிற்றம்பலம்.

ஷ ச து ஷ் ட ய ம்.

அடியனேனங்கத்தாலொருதாமுன்னரும்பணி
புரிந்ததையென்றும், படியுறப்பயின்றதாக்திருவுள

த்திற்பாங்குறவமைத்திட்டாலுய்வேன், வடிவுடையு மையாள்பங்குறவருளும்வள்ளலே யென்னுளத்துள் ளே, குடியுறுஞ்சச்சிதானந்தப்பொதுவிற்கோலயா ர்நடம்புரிசிவனே. (௧)

ஏழையேன்வாக்காலுன்றிருநாம மிங்கொருக ரமுரைத்ததனைக், கோழையிலன்பாயென்றங்காலு ரைத்த கொள்கையதாவெணிற்றுன்முப், பாழையுங் கடந்த சிதம்பரத்துய்வேன்பராபரசங்கரவொல்லா, ஆழையேவிலக்கும் பொற்பொதுநடிக்கு முண்மை யானந்தசிற்சிவனே. (௨)

மனத்தினாலடியேனொருதரநினைத்த வகைதனை யோய்விலாதென்று, நினைத்ததாவன்பினுன்றிருவுள த்தினினினைத் திடுவையேலுய்வே, னனைத்தையுமாளு மகிலநாயகனே யாரணமுத்தியாம்பொருளே, கனத் தபொற்பொதுவினடமிடுங்கருணை காநிதியேசெழுஞ் சிவனே. (௩)

அறிவினாலடியேனொருதரமுன்னையறிந்ததைவெங் தக்காலமுமே, பிறிவிலாதறிந்ததாத்திருவுளத்திற்பெ ட்புறவமைத்தியேலுய்வே, ெ றிதருபிரணவப்பொ ருளதுதானீயெனயாவருமுணராக், குறியதாக்கொண் டைறத்தெரியலையணிந்த கோதிலாநடம்புரிசிவனே. ()

சதுஷ்டயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அ ழு ங் க ல்.

கொச்சகக்கலிப்பா.

அளவைகளாலெவ்வளவு மாருமளவாவணமா, யளவிலுலகுமளந்திருக்கை நின்னியல்பெவ், வளவிலிருக்கவைத்தாயவ்வளவே நிற்றலென்று, னளவாகுமாதலினாலாண்டருள்செய்நற்பொருளே. (௧)

கன்னங்கரியகுழல் கண்டரிவைபின்செலவோ, பென்னம்பெரியமுலை பெட்பொடுகண்டுறவோ,சின்னஞ்சிறியவிடை தேர்ந்துமயங்கிடவோ, தன்னந்தனியேனைத்தான்படைத்தாய் நற்பொருளே. (௨)

மெய்ப்பொருளைநாடாமல் வேறுபலநூன்பயிறும், பொய்ப்பொருளைத்தான்பற்றிப் புக்கழுந்திப் போற்றிடவோ, விப்புவியைப்பற்றியெனதென்றுதுன்புறவோ, துப்பிலனைத்தான்படைத்தாய் சுத்தசிவநற்பொருளே. (௩)

சகஞ்சீவனீசனெனுஞ்சந்தார்த்தநீயே யென், றகஞ்செறியநாயே னறிந்துந்தியங்கிடலோ, சுகங்காட்டுமெத்துவிதந் துய்க்காதலைந்திடவோ, விகம்பரம்பாராதவெனைப்படைத்தாய்செம்பொருளே: (௪)

ஆனவருஞ்சிரவ ணாதியினாற்பதமு, மூனமறவேயேழைக் குற்றிடுவதெங்ஙனேயோ, ஞானமிரு

றிணைய நான்சேர்வதெப்பொழுதோ, மோனநிலைபெ
ற்று முற்றலென்றோசெம்பொருளே. (௫)

எல்லாமாநீநானென் றேய்ந்துபின்சுட்டோவ
லென்றோ, எல்லாமுநின்செயலா மெண்ணிநிற்பதெ
ந்நாளோ, எல்லாவுயிர்க்குமிரக்கமுறலெப்போதோ,
எல்லாத்துறவுமிசைவதென்றோ செம்பொருளே. ( )

எல்லாப்பொருளுமுன்னி லேய்ந்தநிலைமையை
யும், எல்லாப்பொருளினுநீ யேய்ந்ததுவுங்காண்பே
னோ, நல்லார்கொளத்துவித நாடுதன்மாயாகமென,
நல்லார்சொல்வதுதன்னை நன்னுவனோசெம்பொரு
ளே. (எ)

அழுங்கல் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

௯ வேண்டுதல்.

மணிமேவுபுனற்கலையார் மாநிலத்தின்மகிழ்ச்சி
தரு, மணிமாசித்திகளையடையமுயல் விருப்பனைத்
துந், தணிவாகிமுத்திநிலை தான்பெறுமாவிருப்பருள்
வாய், அணிநிலாவணிசடைக டலங்குடப்பெருமா
னே. (க)

அழிகின்றவிடம்வேண்டி யலைந்தலைந்துநாளெல்லாங், கழிகின்றவகைவிட்டுக் கருதரியபொன்னருளைப், பொழிகின்றபூம்பதமே புகலிடமென்றுறவருள்வாய், மொழிகின்றகதிர்த்தாம முடித்தடப்பெருமானே. (௨)

அலைவளர்ந்தநிலமீதி லணைந்தவிதப்பொருடேடி, யுலைகின்றமதிவிட்டே யொருவாதசிவஞான, நிலையருத்தம்யான்றேட நீயருள்செய்பராகுருவே, கலைமகடன்னுயகனுங் காண்பரியபெருமானே. (௩)

அத்தன்முதலானவுறவனைத்தும்விட்டுநாடோறும், புத்தியகலாவருளே பொருந்துறவென்றகங்களிந்து, முத்துத்திவலைமயிர்க்கா றூறுமுதிர்வுறவே, சித்தமதிறுடிநிற்கத்திருவருள்செய்பெருமானே

எங்குமுளபலவான வின்பங்கள்கருதாது, தங்குடத்தானந்தந்தானுடியுளங்கசிவாய்ப், பொங்கியிருவிழியருவி பொழிந்திடவேவிம்மிவிம்மி, யங்கமறந்திடவருள்செ யானந்தப்பெருமானே. (௫)

புகழ்பலவும்பெறக்கருதும் புந்திதனைவிட்டகற்றித், திகழுமுன்றன்புகழ்களின்மேற் செவிகள்செலவண்புடனென், னகமுருகிநாளுநிற்கவருள்புரிதிருட்கடலே, பகவன்முதலாம்பெயர்கொள் பரானந்தப்பெருமானே. (௬)

அருந்தல்பெறவிரும்பிமிக வலையுமுளம்விட்ட
கற்றிப், பொருந்துதிருவருளின்பம் பொசித்திடநீய
ருள்புரிவாய், திருந்துசடைமொழுப்புநகுசிரமுமுறு
ஞ்சென்னியனே, வருந்துமிடைமேற்களப மலைமக
ள்சேர்பெருமானே. (எ)

புக்குமிகப்பலவாகும் பொருந்தல்பெறநாடாம
ற், கக்குமொளித்திருப்பதத்திற் கலந்திருக்கவருள்பு
ரிவாய், பக்குவத்துக்கீடாகப் பலவிதமாமுத்திநெறி,
மிக்குநிகமாகமத்தில் விளம்புநடப்பெருமானே. ( )

துர்க்குணமாங்காமாதி தொடராமற்சுகம்பெ
ருக்குஞ், சற்குணமாமகமடக்கஞ் சாந்தமவாவுளமொ
டுக்க, மிக்கபத்திதுறவடைதன் மெய்யுணர்தல்சிரத்
தாதி, யெற்கருள்வாவிடைப்பரியே றின்பநடப்பெரு
மானே. (கூ)

இலங்குதிரையெனுமூன்று மெழிற்பதத்தான்
மலமழுத்தித், துலங்குதிருவருளென்னுந் தூக்கிய
தாள்கொண்டெடுத்துக், கலங்குமெனைச்சாயுச்சியகதி
யினிடையுறவைப்பா, யலங்குமரிக்கரியளித்தவான
ந்தப்பெருமானே. (க0)

வேண்டுதல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

புலம்பல்.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

காமமாகியகடலினில்வீழ்ந்து கடையனாகியிங்
குழன்றிடலறிந்து, நீமகிழ்ந்துமுன்வரலபுரியாமணி
ற்றருளழகாகுமோவுனக்கு, மாமன்மார்பனும்பூசிக்
குமடியாய் வாசமாமலர்ப்பிரமனுமறியாத், தேடன்
கொன்றையம்முடிவளர்பரமா தேசுமேவியசிற்சபை
ச்சிவமே. (க)

உலையும்வாழ்க்கையைமெய்யென்றுநம்பி யுற்று
நாயினுங்கடையனாய்த்திரிந்து, நிலைமையாகிய துணை
சற்றுமின்றி நின்றுவாடுதெறன்னையேயறிந்தும், அலை
வனாகியநீவராதிருக்கை, தக்கதோநினைப்பொருளத்
தேனே, தொலைவிலாக்குள்ளக்குளிர்ந்திடும்பொய்
கை சூழ்ந்தென்புலியூருடைச்சிவனே. (உ)

சூத்திரத்தவன்வன்கொலையாளன் கொடுமையோ
னறுங்கைமருந்தினுக்குப், புத்தியோடுசுண்ணைம்பிடு
வெனினும் பொருந்திடான்மிகுகோளனிராகன், மு
த்திசேரடியாரொடுக்கூடான், மூடனென்றெனைவிட்
டிடநினையேல், சித்திசித்தியென்முடியபரமா தெய்வ
மம்பலநின்றிடுமொளியே. (ங)

நம்புவோருக்கும் வஞ்சகஞ்செய்வோ னல்ல சால்பொன் றுநாடிடிலில்லோன், வம்புசெய்பவன் வெகுளியனீமெய் வார்த்தைசொல்லெனின் மருந்துக்குஞ்சொல்லான், வெம்புசீவருக்கிரக்கமதில்லான் மிக்கவிடம்பனுலோபனிடும்பன், பம்புளத்தனென் றேவிடவினைபேல் பாவிப்பாருளத் தெழுமருட்கடலே. (௪)

குளிர்மை தங்கிபகங்கைவாழ்சடையாய் கோலமார்புனிற்றம்புலித்தலையா, யொளிவிளக்கியபளிக்குநன்மலையே யோமெனும்பதப்பொருளதாஞ்சிவனே, யளிகள்சூழ்ந்திடுகொன்றையந்தார்சேர்ந் தணிசெயம்புயனேமலைவில்லோ, யெளியனுளமஞ் சக்கரப்பொருளோ யிசைந்திடும்படியருள்புரிபரனே. (௫)

புலம்பல் முற்றிற்று.

௨

திருச்சிற்றம்பலம்.

மு றை யீ டு.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்டநின்றிருப்பாதாம்புயத்திற் செறிந்திருக்க, நார்கொண்டவென்னைமனப்பேய்பிடித்து

௭

௧௧அ

சிவசந்நிதானமுறை.

நடுக்கமுற, நீர்கொண்ட பார்மிசையாட்டுதென்மாற்றி
திகழருள்செய், கார்கொண்ட செஞ்சடைத்தேவேயிர
த்ன சபாபதியே. (௧)

ஆட்டாமலாடியபம்பரம்போற்றனதாமுருவக்
காட்டாமலுள்ளெரும்புறத்துஞ்சுழலுங் கலிமனத்தை
வீட்டாயல்வீட்டிநடுநிலேமேவிய வீடெனுறும், கா
ட்டாமரைப்பதந்தாளிரத்ன சபாபதியே. (௨)

வானேமுதலுலகெல்லாமுஞ்சற்பித்து வாழ்த்த
த்து, ஞானேயரசெனத்தானேசரித்து நடித்துமிகத்
தேனேயெனுமருமுர்மனவானரந்திரவருள், தானே
தனக்கொப்பெனவாழிரத்ன சபாபதியே. (௩)

அங்கையிலேலெறியம்மனேபோல வகத்திலுள்
ளே, பொங்கிக்குதித்துக்குதித்தெழுந்தோடிடுபுன்ம
னத்தான், றங்கியிருக்கவருள்செய்துபேயனேத் தான்
கலப்பாய், சங்கரசம்புசிவமேயிரத்ன சபாபதியே. (௪)

அதிகவிசைகொள்விறிசெணப்பன்முக மாச்சி[illegible]
றிச், சிதறியெழுந்திடும்பாழாமனந்தனைத் தீர்த்து[illegible]
த்து, இதியமைதுஞ்சிதாஞ்சிதபாதத்திற் சேர்த்தருள்
வாய், சதுர்பெறுஞானமணியேயிரத்ன சபாபதியே

புலிபோற்புலத்தின்மனம்பாய்ந்து பாய்ந்துசெ
ம்போதகலை, மிலியாகியானிற்கச்செய்தவினைலதையி
ன்படிப், பலியாக்கியென்னையருளாகவாடலுன் பா
ரமன்றே, சலிலாலங்காரச்சடையோயிரத்ன சபா
பதியே.

(௬)

ஐவாய்களாலும்விடமூட்டிக்கொல்லு மரவமெ
ன, மெய்வாய்கண்மூக்குச்செவியாலுந்துன்ப மிகக்
கொளுத்திக், கைவாய்தவத்தைக்கெடுத்துத்திரியுங்க
லிமனங்கொல், தைவாய்பிறையிற்சமமாமிரத்ன ச
பாபதியே.

(எ)

சேர்ந்தாரைக்கொல்லியெனவடியேனைத் தினத்
தினமூக், காந்தாளமோடுவருத்தித்தவமுங்கனகுண
மூங், தேயத்தோடச்செய்யு மனக்கொட்டந்தீர்ந்திடச்
செய்வையரு, டாந்தாமெனநடித்திட்டோயிரத்ன ச
பாபதியே.

(அ)

முத்தர்கள்போற்றுந்திருநடங்காண முயற்சியு
டன், சுத்தநெறிச்செலவாவென்றடியன் செலக்கு
றித்தாட், பெத்தநெறியிலிழுத்திடும்பாழ்மனம் பேர்
த்திடுவாய், தத்ததையென்றுநடிப்போயிரத்ன சபா
பதியே,

(௯)

புற்பேய்பனித்துளிபோலாமுடம் பென்றுபே
கமகி, னிற்பேமெனச்சொல்பொழுதேமுடுக்கி நீ

கலக்கித், தற்போதனைசெய்யும்பாழாமனத்தைத் தி
டைத்தருள்வாய், தற்போதமற்றநிலைமேவிரத்ன ச
பாபதியே. (௰)

முறையீடு முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

கர்ணாமிர்தம்.

ஆசிரிய விருத்தம்.

மாதர்கூந்தற்கருங்காட்டின் மயங்கிவிழியம்பே
றுண்டு, கேதமாகியுழல்வேனைக்கிழக்கேதள்ளிவிட்டு
விடேல், பூதநாதசங்கரனே பொன்னம்பலத்துணை
மாமூ, வேதநாதபரம்பரனே விளங்கும்புலியூருடை
யானே. (௧)

அலைக்குமருப்புநகையார்தம் மகன்றவல்குற்கு
ழிமூழ்கி, முலைக்குன்றேறிமலைக்கின்ற மூடன்றன்
னைவிட்டுவிடே, துலக்குஞானச்சுடரொளியே தூண்
டாவிளக்கேதீங்கரும்பே, கலக்குமெங்குங்காருணி
யக் கடவுள்புலியூருடையானே. (௨)

அன்னநடையார்சிதம்பமெனு மரவந்தீண்டச்
சிற்றின்ப, மென்னுநஞ்சந்தலைக்கேறி யிருப்பேன்ற
ன்னைவிட்டுவிடேல், பொன்னம்பலத்தில்வாழரசே

ங்கற்பகமேயற்புதமே, தன்னொப்பில்லானெனூழ்க
லே சந்தப்புலியூருடையானே. (ங)

சங்கவளையார்தனமலையைத் தனமாமலையென்
றேகருதி, யிங்குத்துன்பமடைகின்றவேழையேனை
விட்டுவிடேல், பொங்குகங்கைமுடியணிந்தபுனிதா
ஞானதயமூர்த்தி, செங்கைவீசிநின்றாடுஞ்செல்வாபு
லியூருடையானே. (ச)

மடவாருயர்தமூலைக்கிரிக்குந்வளருநிதம்பக்க
டற்குமிடை, யிடைவன்கொடியாற்கட்டுண்டிங்கின்
னலுற்றேன்விட்டுவிடேல், விடமேறிடுகண்டத்தாந
ல்வேதாவேதப்பொருளேயவ், வடையார்புரமூன்றெ
ய்தவா வணியார்புலியூருடையானே. (ரு)

ஏய்ந்தமாதர்மூலைக்கரிக்குமிடையாமரிக்கு மிடை
நெறியிற், போந்துரோமச்சங்கிலியார்ப்புண்டேன்ற
ன்னைவிட்டுவிடேல், பாய்ந்தபுலியினதடரித்தபரனே
பரமரகசியனே, தோய்ந்துவானமுயர்சோலைசூழ்பு
லியூருடையானே. (சா)

மின்னார்கொங்கைப்பந்தாலே மெத்தமொத்துண்
டிளைப்பேறி, யின்னுநிதம்பப்பாழ்ங்கிணற்றிலெடுப்
பாரற்றுக்கிடப்பேனை, யுன்னாருட்கண் கண்டிலை
யோ வுனக்குமுறைதான்கேட்டிலையோ, பொன்னா
ர்மேனிவிடங்கனே புகழார்புலியூருடையானே. ()

பொற்பார்கொங்கைமாதருடைப் போகம்வே
ண்டித்திரிந்துழன்றே, யெய்ப்பாய்நாயேனிங்கிருக்
குமிருப்பைநீதானறியாயோ, வெப்பாலவர்க்குமப்பா
லாயிலங்குஞானச்சுடரொளியே, பைப்பாம்பணிந்
தபரஞ்சுடரே பாங்கார்புலியூருடையானே. (அ)

அடுக்குமன்னைமன்னமிலா வையருந்தகந்தைத்
ளர, நடக்குமடவார்விலையதனாலென்மனத்தைத்தவி
ழ்த்திடுவாய், படுக்குமாலோடயன்வணங்கும் பாண்
டிநாட்டையாளரசே, யெடுக்குமன்றுமலையானே
யெழிலார்புலியூருடையானே. (௯)

பாலிற்றெளிதேன்கலந்தற்றே பணிநன்மொழி
யார்தம்முடைய, வாலிதானவெயிற்றாறிலருநீரொன்று
கருதடியேன், றாலிகரித்தசித்தத்தைத்தூரநீக்கியொ
ழித்திடுவாய், கூலியாளாமண்சுமந்துகொண்டபுலியூ
ருடையானே. (௰)

அழகுரோமக்கொடிகட்டி யல்குற்றேரின்மதத்
தேறி, யெழிலார்புருவவில்வளைத்தே யெரியார்விழி
வெங்கணைதொடுத்துச், செழியதடியாலோங்குமினர்
சேனையோடென்னைக்களத்தி, னிழியுமதனையெரிப்
பாய்நிற் கியசாம்புலியூருடையானே. (௧௧)

நாட்டமீனங்கண்டவளை நகிலக்குமிழியுந்தியுந்தி, நீட்டமடிப்புத்திரைமாதர் நெரும்வடிவக்கடலாழ்ந்து, வாட்டமுறயான்விதிவசமோவந்தபவித்தான்விழித்திருக்க, வாட்டையெடுத்தபெருங்கள்வாயலர்சேர்புலியூருடையானே. (கஉ)

அல்குலரவமிடைச்சிங்க மணிசேர்கொங்கைக்கரியோதிச், செல்குலாவுகளக்கமுகந் திரண்டதொடைச்செவ்வாழைகளும், புல்குமாதர்வடிவனம்புகுந்துமயங்கவிதிவசமோ, மல்குவளங்களகலாத வண்ணப்புலியூருடையானே. (கங)

ஈரமகன்றநெஞ்சவிற லிணைந்தகேசப்புகையைவிட்டு, நேருமுகச்செங்கொழுந்துயரநீட்டியெரியுமாதருக், கோரவனலிற்புழுப்போலக் கொடியேன்வாடவிதிவசமோ, சேருமன்னவயல்சூழ்ந்து செழிக்கும்புலியூருடையானே. (கச)

கடிப்பூங்குழலார்தம்முடைய கண்டங்கண்டங்தருமென்று, மடிப்புமடிப்புத்தருமென்றும்வளர்காலுயிர்கொள்காலென்று, மிடிப்பாரவலையில்லாதவேழையுணரவருள்புரிவாய், பொடிப்பூசிமெற்றிருமேனிப் புங்காபுலியூருடையானே. (கரு)

பிடிபோனடையார்காதளவும் பெயருங்கணை
வெங்கணையென்று, மிடையூறிடையூறிடுமென்றுமெ
ழில்வாய்க்கூற்றுகூற்றென்று, மடிகளடிகடருமென்
றுமடியேனறியவருள்புரிவாய், கொடையோர்மேவு
நல்வேதக்குன்றேய்புலியூருடையானே. (௧௬)

பென்னம்பெருங்கொங்கையர்சமுகம்பேயார்சமு
கமேயென்று, நன்னங்கணவர்கைநாட்டனைகை
யைநாட்டுமுலகர்திரு, முன்னொன்றென்னுருணாரவ
ருணமூவாவிடையின்மிகுமிடியாண் மன்னுதனங்க
ளைமிகவுடையாண் மணவாபுலியூருடையானே. ( )

நாடுங்காமமூலமத னுசஞ்செய்தநீயிருக்கக், கூ
டுங்காமக்கடல்கடக்கக்கொங்கைக்குடமீயுங்களென
த், தேடுந்தொடியார்பின்சென்று திரிதலழகோவுன்
னடியேன், நீடும்வேதவனம்வாழு நிமலாபுலியூருடை
யானே. (௧௮)

காயுங்காமக்கனறணிக்கக் கங்கைகளைத்தவுமி
விட்டுச், சேயவதரபானமியான்செய்யவருள்வீணொ
ட்பெண்ணூர், வாயைநோக்கிமிக்கலைந்துவாடலழகோ
வுன்னடியேன், பாயுங்கருணைப்பெருங்கடலே பண்
பார்புலியூருடையானே. (௧௯)

தேமன்னின தநிருப்பாதச் சேதமிழலையணையா மற், காமவெயிற்குக்குறங்கென்னுங் கதலிநீழலருள் வீரொன், சேமப்பொருளீரொனமாதர் பின்னேதிரிதல ழகேயோ, மாமன்மார்பணிதம்பணிய வாழ்தென்பு லியூருடையானே. (௨0)

கர்ன்றுமிர்தம் முற்றிற்று.

௳

திருச்சிற்றம்பலம்.

விண்ணப்பம்.

பாவினம்.

வெள்ளமிடவிருகண்ணீர் மொகுமொகெனவங் க மிகக்குழையப்புளகமெழவிநிர்த்திடவெட்டுயிர்த்து ங், கள்ளமொடுபொய்தவிர்ந்துசற்குணங்களுற்றுங் கன்மனந்தானனல்கண்ட வெண்ணெயெனவுருகிப், பள்ளமதிற்செலுநீர்போற்றிருவடியிற்சேரப் பரப்பி யிருகரங்குவித்துமுடியிற்பால்கவன்டு, தெள்ளமுத மெனத்துதிகள்பலவாகச்சொல்லத் திருவருளைத்தந் தருள்வாய் சிற்சபைவாழ்சிவனே. (க)

சீர்வைத்தபட்டம்விரித்து சித்திரங்கள்காணத் தெரிவித்துப்பின்குவிந்து திகழ்த்தியிடாதென்னப், பார்வைத்துப்பின்பொடுக்கல் பண்ணும்வெளிச்சத்

தே பழியென்னுங்கொடியருக்கும்பரியசுடர்வாளே; நாவைக்குழுபகிடதடுச்சிரசில்வசித்து நடனமனுநி னைமுமிகவிலுமகாசிவமே, யாவைக்குமாங்தெருளே யிலங்கிடுநல்லருளேயெனைப்பிரியாப்பரம்பொருளே யெண்ணமுடித்தருளே. (௨)

கட்டுமாத்தீக்கனியேகதலிபலாக் கனியே கனி களெலாம்பிழிந்தெடுத்துக்கலக்குமொருசாறே, பட் டவதிற்றெளிதேனும்பாலுடனே கண்டும் பாளிகமு ங்கூட்டிமிகப்பதத்தொடுசெய்திரட்டே, நட்டமிலா ச்சிவமணந்தான்வீசுநறுமலரேநண்ணுமதிலொழுகு மதிமதுரமெழுந்தேனே, யெட்டவரிதாங்தெருளேயி லங்கிடுநல்லருளே யெனைப்பிரியாப்பரம்பொருளே யெண்ணமுடித்தருளே. (௩)

அருண்மேவுமின்றனக் குப்புறம்பாகுமாற்றால கங்கொள்வினைக்கடலழுந்திநினைமறந்துபுரிந்த பெ ரும்பிழைகள்பொறுத்துநதி யொடுக்குபெருங்கடல் போற்பேயேனைநீவிழுங்குபெரியபெருமானே, யொ ருகோடிபாவமொன்றாச் செய்யும்புண்ணியமொன் றொருகோடியாகச்செய்கச்சிகொளேகம்பா, கருமே கமேருதரித்தெனக்கரியினுரிவை கனகமயத்திருவுரு விற்றரித்தமகாதேவே. (௪)

கொல்லாதநால்வர்க்கும்யோகியாகிக் குருஞானமருள்சிவனேவேகியாகிப், பொல்லாரைத்தண்டித்தோய்சிவர்கட்குப்போகியாயின்பமளித்தருளுந்தேவே, நால்லாளோடிடபத்திவர்ந்துவந்து நாயேற்குக்கருணைநல்கியறிதல்செய்த, வெல்லாநின்றிருப்பணியாகக்கொண்டேகுற்ற மெல்லாநீபொறுத்தருளவேண்டுமென்றே. (௫)

எச்சமயத்துள்ளவருமிறைஞ்சாநின்ற வின்பமயத்திருவடியிலணைந்துவாழ, விச்சிறியேன்றனைவைத்துச்சிறுபோதத்தி லியங்காமற்காத்தலுன்றன்கடனேயாலம், வைச்சகண்டாசசிகண்டாவகண்டயாவவாழ்வுற்றபரசிவமேஞானமூர்த்தி, சச்சிதானந்தமயப்பொதுவின்மேவித் தனிநடஞ்செய்நடராஜதேவதேவே. (௬)

துறந்துநின்றதவர்க்கறமுஞ்சொன்னதேவே சுதைநீர்போலுங்கலந்தேசுடர்ப்பாதத்தி, லிறந்துநின்றும்பிறவாமலிருக்குஞான மிசைந்தளித்தாயதனையுணர்வின்மையாலே, மறந்துநின்றபிழைபொறுத்துமடவேன்வாழும் வண்ணமருளொடினிதாமகிழ்ந்துநீயே, சிறந்துநின்றசிவகாமித்தேவியோடுஞ் சேவமர்ந்திங்கெளியேன்முன்றிகழுவாயே. (௭)

சிவசந்நிதானமுறை.

சிலந்திகண்ணப்பர்சாக்கியர்முதலோர் தீமை
யைக்குணமெனக்கொண்ட, கலந்தனைக்கண்டுதிருவ
டியடைந்தேனற்றிருவாக்கொன்றுசொல்வாய், சலந்
தலைக்கொண்டதேவனேயுமையா டங்கியபங்கனே
யெவைக்கும், பலந்தருதிருச்சிற்றம்பலம்வாழும்ப
ரமனே நடனசங்கரனே. (அ)

கதியருள்சண்டைபாதனார்முதலோர் கருதியவண்
ணமேயளித்த, இதனைக்கண்டுதிருவடியடைந்தே
ன்றேவி யாடென்முனேநிற்பாய், விதியொடுமாலும்
புகழ்ந்திடாதாவித்தகாதென்புலியூராம், பதியமர்தி
ருச்சிற்றம்பலம்வாழும் பரமனேநடனசங்கரனே.

செம்பதந்தன்னைச்சிக்கெனப்பிடிக்கத் திருவரு
ட்கெனையாளாய், கம்பமார்தேவமகளிர்மங்கலநான்
காத்திடுங்கண்டனேயகண்டா, சம்புவேபொன்னம்
பலவனேசெகனாதனேங்கணாதனேவென்னை, வம்பு
யவிழியாளின்புறநட்டுஞ்சேச யரசனேபரமராசியனே.

என்றுமியானெனைத்தென்கின்றவாசனையுமிங்கக
க்கவலையுமின்றி, புன்றனையனுபவத்தளவடியேயுன்
னருளாலுணர்ந்தடங்கி, யொன்றதாயின்பமடைந்து
மேனிலையிலுற்றிடவேமைமேன்முன்வந், தின்றுநீக
[illegible] புரிந்திடல்வேண்டுமிறைநடராஜசங்கரனே: ( )

தவளத்திங்கண்முடியுலவத்தாதாடுறும்பூஞ்சோலைதிகழ், சுவணத்தில்லைமணிமன்றுட் சுகமாநடனமலர்க்கூந்தற், பவளத்ததரத்துமைகாணப்பாயிலுங்கருணைக்கடலேநீ, கவலைக்காளாமெனைப்பொருவில்கருணையமுதீந்தாளாயே. (௧௨)

ஆராவியற்கையவாவெழுப்பி யதனாற்பிறப்பில்வீழ்த்திட்டுப், பேராவியற்கைபெறலொட்டாவகையேபெருக்கிச்சுடுகின்ற, காராரஞ்ஞானக்கினியைக்கழிக்கஞானவமுதீவாய், சீராருஞ்ஞானகானேதில்லைப்பொதுவினம்மானே. (௧௩)

ஊனுந்தோட்டிகொடுபுலமாமோனைந்தானையடக்குதல்செய், வானூரவரைக்கூடும்வணம்வண்மைஞானவமுதீவா, யெரியாரிடுகாடுபேய்பிணமூண்டேப்பமிட்டுப்பேயாடக், கரிகாடரங்காவாடுகின்றகருத்தாமுதுகுன்றுடையானே. (௧௪)

காரார்கூந்தற்பிறைநுதல்வாட் கட்செங்குமுதவாய்மாதர், நீராமயக்கிற்பட்டுழலுந் நீயேனுய்தற்கருளாயோ, ஏரார்ஞானகரண்டமுடி வேகமாகத்தகவிலர்க்குப், பாரார்கன்மகொண்டத்திற்பலவாச்செரால்வேதாகமனே. (௧௫)

பேதமிலாத்தேவேபொற்பிரபைக்குன்றே பே
சரியவுயிர்க்குயிரேபிரமமயமே, வேதமிலாக்களமே
யிலகுவேயெங்குமியானைக்குங்கரியேநல்லியசேபக்த
க், கேதமிலாத்துரியகரதிற்கிளர்ந்தகேவலப்பெண்
கூடிநலங்கிடைத்தல்வேண்டிச், சேதமிலாச்சன்மார்
க்கஞ்சிறியோன்சிந்தச் சிறுதூரகடக்கநினை திருவுள
த்தே. (௧௬)

தருமமிலேசிற்குமொருசம்புமுனிவற்கரிய சம்பு
கனியை, யருளும்வளர்கங்கையினைவேய்ந்தனிரும்
புலியினதளுடமா, மருமலர்கனிற்பாஞ்சசன்னியமு
மன்னமதும்வாழுமதனுற், றிருவனிகர்பைங்கமலநற்
றடமிலங்குமொருதில்லைநகரே. (௧௭)

ஒன்றேதெய்வமுண்டென்றுணர்மி னுலகீரே,
நன்றேயாடும்வாரிளைற்காண்மினுலகீரே, நன்றுமடி
கனுடிப்பிடிமினுலகீரே, பொன்றுமுத்திப் புரிகைக்
கொளலாமுலகீரே. (௧௮)

அாறுபூனையுளமாம்பெருங்கோயில்வைத் தன்
பெனும்புட், கரமாட்டிச்சாந்தமென்சந்தனஞ்சாத்திக்
கருத்தொருமிக், தூரனாதியானமலர்தூஉய்த்தற்போ
தமெனுள்ளமுதூ, திராவிடீவேதிப்பதென்றேநேட்
சிதம்பரனே. (௧௯)

ஆர்புலக்காட்டைப்பஞ்சாக்கரவாட்கொண் டு கற்றிமனப், பார்தான்றிருத்திச் சிவஞானவித்தைப் பதித்தருளா,நீர்மிகப்பாய்ச்சியுயிர்ப்போகவெங்களை நீத்துச்சிவ, காரவுறுவுணச்செய்வாய்நடேசநற்கா ரணனே, (உ0)

நெஞ்சேகுருசொன்னெறியினின்றுநெடும்ப ணியி, னஞ்சேகளத்திற்குடியாநடேசனறிபகஞ்சச், செஞ்சேவடிகதியென்றிருந்தாலுஞ்சிறிதுமையர்ந், தஞ் சேனவெங்கக்கொலையேபுரிக்கிடு மந்தகற்கே. (உக)

எப்பிறப்பினையெய்தினு
மொப்பிலுன்பதத்தொன்றிடுங்
கப்பிலன்புகளத்துறத்
தப்பிலாதருள்சம்புவே. (உஉ)

விண்ணப்பம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

பூமலிகற்பகப் பொன்னுலகமரு
நாமலிவேதமு நாடித்துதிக்கச்
சிவகாமியம்மை திருவிழிகளிக்க
வவனிவாழுயிர்க ளருங்கதிசேர

வமையும்பொருளுட மருவியசிவமே
யிமையாநாட்டத் தெழுமற்புதமே
யேதமாம்பந்த மெழின்முத்தியினும்
பாதுகாத்தருளும் பரிபூரணமே
சரியைகிரியைக் குரியோர்வணங்க
வுருவாகுவாம் பெருஞ்செல்வமே
தகவுறநாடிச் சக்கரமுணர்ந்து
சுகமுறநாடிச் சுத்தியும்பெற்றே
யாசான்பதங்க ளன்புடன்போற்றிப்
பேசாதிருந்து பிராணாபானன்
றஞ்செயலடக்கித் தம்வசமாக்கிச்
செஞ்சுடர்மதிதாம் வலமிடந்திரியுங்
கிரியாஞ்சுழினைப் புருவநடுநோக்கிப்
பொறிவழியாற்புலம்புகு மனதிறுத்திக்
குறிசிவத்தியானங் கொண்டயோகியர்க
டெரிசனஞ்செய்யுந் தேஜோமயமே
திரிமலமறுத்துச் செய்வினையால்வரு
மின்பத்துன்பங்க ளியல்பெனப்பொறுத்தே
யன்பும்வெறுப்பு மகன்றிடத்தள்ளி
வேதாகமமுடி வோதியுணர்ந்தே
யீதுவெனுந்தற் போதமுமொழித்து
கவடறுபொருளுணர் சிவஞானிகளின்

மோனத்தெழுந்த வானந்தமே
தீர்த்தமாகி யெவைக்குஞ்சீர்ப்பர
மார்த்தமுணர்ந்த மதிஞர்க்குறவே
மண்ணறலங்கி வாயுவாகாய
மொண்கதிர்மதிதம் முடனுணர்வான
வெட்டுருவாகிச் சுட்டறுபொருளே
மாயைமலஞ்செய் மயக்கத்தாலே
தூயஞானச் சுகநெறிவிட்டே
குடும்பபாரக் கொடுஞ்சுமைதாங்கி
யில்லாண்முதலோ ரெண்ணமாம்பொதியே
ரெல்லையினடத்திக் கொண்டுறுகண்ணார்
மடமாமருநெறி நடந்திடும்போது
மனமேகந்தான் றனமுதலான
விச்சையாநீரை நிச்சமும்பொழிவுற
வைம்புலமான வகலிருண்மயங்கி
வன்பவமாமுள் வனத்தினடைந்தே
யழியாக்கவலை யாங்களருளையி
னழுந்திவருந்தி யாகமுமிளைத்துச்
சித்தங்கலங்கும் பித்தனேற்கென்னே
குளிர்நிறைமதியங் குலவுண்முகமு

சிவசந்நிதானமுறை.

மணிநிறைகமல மனைவிருவிழியுஞ்
சத்தியவாக்குந் தன்கழுநீர்மலர்க்
கத்திகைப்புயமுங் கண்டடைந்தோனை
யன்புடனெடுத்தே யணைத்திடுகரமு
மின்பங்கொடுக்கு மிணைத்தாண்மலருஞ்
சிவனிச்சுயம்பிர காசதேசிகனென்
றவனியினிவந் தடியேன்மீதி
லருள்விழிசாத்தித் தெருளுறுதீட்சை
பொருளுறச்செய்தே யொருமொழிவழியா
ஞானமொன்றுமே மோனமளிக்குந்
சற்குருலிங்க சங்கமவழியாம்
பொற்புண்ணியங்கள் புனிதசித்தமதா
செய்துஞானநூல் சிரவணத்தியா
மெய்ச்சரியாதி விதிசெலுத்துவித்
துண்மைமுத்தித் திண்மைதருமென்றும்
வாசனையாலே வந்திடுமச்ச
மாசைவெகுளி யடர்மயக்கறுத்து
யானெனதென்செருக் கிகந்தருடவன்றுணை
ஞானநெறியி னடப்பாயென்று
மிருவினைசமனுக் கருதிரொன்றும்
வினைகடம்மாலே தணுவருமென்றும்

தூலமுதலவை துக்கமகற்ற
மேலுமியல்பா மிவையுணையறியா
வழியுமாகலி னெழிலுளசென்னிகழ்
மேலெதிரென்ற காலமூன்றினுமே
குற்றமகன்போ லுற்றனவான
வுருநாமமக ளொருங்கேகெடுமாய்யென்
றுண்மைவிளங்கக் கண்ணையளித்தும்
பூசிவமணி புண்ணியபஞ்சாக்கரப்
போதப்பொருள்மெய்ப் போதமாமென்று
நிற்குணபூசை நெறியறிவித்துஞ்
சற்குணமாக்கும் பஞ்சதசாங்க
யோகம்பகர்ந்து யோகமுற்றவிர்த்துங்
குடவெளிமாவெளி யடைவுபோலக்
கருவிகடம்மைக் கலந்துங்கலவா
திருக்குமிருக்கு மியல்புடையறிவே
சச்சிதாநந்த சற்சொரூபமது
நிச்சயமாக நீயென்றுரைத்து
மிதயத்தாறுதி பதித்தந்நிலையின்
ஞானசமாதி நண்ணியின்புற்று
மோனமாய்ச்சுட்டு முற்றுநீக்கிந்நிலை
நியல்புறுமுத்தியு மெய்ம்மகத்தத்

துயர்ந்திடுநிலையு மூவமையற்றதுமா
மாதலினன்பா யாக்கையுள்ளளவுந்
நீதுமையையயந் திரிபிலாதமர்ந்தே
யிங்ஙிலைவாழ்தி யென்றும்புகன்றே
யுன்னடியேனைக் காக்குமுண்மையனே
கைம்மாறுவேண்டாக் கருணைக்கடலே
பொய்ம்மலமறுக்கும் புண்ணியமுடிவே
பவமறுத்தருளுஞ் சிவபுரத்தரைசே
கன்னற்பாகே கதலிக்கனியே
யென்னுடையுயிரே யென்கண்மணியே
யுய்வகைகாட்டு முணர்வாமணியே
கைதரவந்த கடவுள்கற்பகமே
யிதயகுகேச வதிரகசியமே
சுருதித்தலைவாழ குரியச்சரணந்
தருவாய்தருவாய் சரணஞ்சரணே.

ஆசிரியப்பா முற்றிற்று.

கூ. விருத்தம்.

வெண்பிறையணிந்தவேணி விண்ணவாவன்பி
லாத, பண்பினனெனினுமுன்னைப்பாடினலிரங்குவா

யென்,றெண்படுதோத்திரங்களிசைத்தன ளருளாலே ழை, தண்படுகுணமாக்கொண்டு சரணருள்வாய்நீ வாழி. (௬)

சிவசந்நிதானமுறை
முற்றுப்பெற்றது.

உ
திருச்சிற்றம்பலம்.
சிவகாமியம்மைபேரில்
ஆசிரியவிருத்தம்.

பற்றியபசியிற்கிரையதுதேடிப் பறந்திடக்கடு வெளிசுழல்கால்பயந்தருமிடிகண்மினவிருண்மழை தம்பவித்திடச்சிறகுகளோய்த,லுற்றிடும்பொழுதில் வில்லுடையனேக்கண் டொடுங்கியபறவைபோற்றுய ரமுறுவரிப்புலியினைதருளிலசேதலுலகினிலன்புறு க்தாய்தான், பெற்றிடுமசவிற்பேதையாயிருந்தாற்பி ன்றனிவிடுவதுமுண்டோ பிழைகளியான் செயினும் பொறுத்துளமகிழ்ந்து பிழைக்குமாறருள்புரிந்தா ளாய், சிற்றிடையாளேயருட்பெருங்கடலே சித்தித ந்திடுகுணக்குன்றே திகழ்சிதம்பரியேமகிழ்திகம்பரி யே சிவசிவகாமசுந்தரியே. (௧)

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

குருஸ்துதி.

என்னகத்துள்ளே யுனக்குறவாகியிருப்பதை யறிந்திடாதலைந்து, பின்னியகோசரூபமாமாயைப்பி ணிப்புறுபேதையேன்முன்வந், தின்னருள்புரிந்தே யொருமொழிபேசியியைந்ததற்போத நீங்கினக்காற்; றென்மறையாகமாந்தமொன்றெனச்சொல் சுயம்பி ரகாசதேசிகனே. (௧)

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

அடியார்துதி.

கருநீறுபடுத்துமுத்தி காட்டிடுமீசஞானத்; திரு நீறுமணிபூண்டேத்தல் சிறப்பெழுத்தைந்தையோதல் விருநீர்மையின்றியுன்ன லேய்ந்ததிங்கணதன்மேவு ம், பெருநீர்மையார்க்கன்பாற்றும் பெரியவர்க்கடியே ன்யானே. (௧)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

விளம்பரம்.

இதனையியாவருக்குமறிவிப்பதியாதெனில் சென்னைமாநகரம் பெத்துநாயக்கன்பேட்டை சீரங்கப்பட்டணம் சுப்பிரமணியமுதலியார்தெருவில் (உ௫) வது கதவிலக்கமுள்ளவீட்டிலிருக்கும்கொண்ணூர் மாணிக்கமுதலியாரவர்களுடையமனோன்மணிவிலாசமென்னும் அச்சுக்கூடத்திற்பதிப்பித்திருக்கும் புத்தகங்களாவன.

க௨, ஸ்கந்தமாகியபாகவதவசனம் சித்திரப்படங்களுடன்

விசேஷமாகஅநேகங்கதைகளும் விருத்தங்களுஞ்சேர்ந்தபாரதம்வாலம்-௬-கூடியபுத்தகம்.

அருட்பா.

பெரியபுராணம்பாட்டு.

காளத்திபுராணம்.

கந்தபுராணச்சுருக்கம்.

சிதம்பரபுராணம் மூலமும் உரையும்

பத்திராசலராமதாசுகீர்த்தனை.

சாணங்தகணேசர்புராணம்.

ஞானவாசிட்டவசனம்.

நைடதமூலம்.

இரங்கேசவெண்பா மூலமும்உரையும்.

இன்னும்பலவிதபுத்தகங்களும் விலைசரசமாய் ஷை அச்சுக்கூடத்திலும் சிதம்பரம்மேற்கோபுரவாயற்படியில் புத்தகஷாப்புக்கடைவைத்திருக்கும் ஷை கொ - மாணிக்கமுதலியாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.